# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR
## O.S. No. 487/2023
## Deposition of Witness for the Plaintiff – PW2

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **சதீஸ்குமார்** | **Caste:** | |
| **Father Name** | **விஸ்வநாதன்** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **நன்னியூர் புதூர்** | **Religion:** | |
| **Taluk:** | **மண்மங்கலம்** | **Age :** | 53 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 22.10.2025 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 08.01.2022ம் தேதியன்று பிரதிவாதி வாதியிடம் ரூ.6,00,000-ஐ கடனாக பெற்றுக்கொண்டு ஒரு கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்தார். அந்த கடனுறுதிச்சீட்டில் நான் ஒரு சாட்சி கையொப்பம் செய்தேன். பிரதிவாதி அதில் கையொப்பம் செய்து வாதியிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சிகள் என்ற இடத்தில் செய்யப்பட்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நான் தான் சதீஸ்குமார் என்பதனை காட்டுவதற்கு என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆதார் அட்டையின் நகல் திறந்த நீதிமன்றத்தில் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.